**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : MC.19/2023 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : சோனாலி | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : தினேஷ்குமார் | Age | : 24 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of** 10.01.2025.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நானும் எதிர்மனுதாரரும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் என்றால் இல்லை. எனக்கு திருப்பனந்தாள் கயிலை மாமுனிவர் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது 8 பவுன் நகை போடப்பட்டதற்கான ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு திருமணம் ஆகி 6 வருடங்கள் ஆகிவிட்டது. நான் எத்தனை வருடம் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்தினேன் என்றால் 1 வருடம் குடும்பம் நடத்தினேன். எனது தாத்தா கொத்தனார் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் கொத்தனார் வேலை செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. திருப்பனந்தாளில் எதிர்மனுதாரர் எந்த இடத்தில் டெய்லர் கடை வைத்துள்ளார் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் கூலி தொழிலாளி என்றால் சரிதான். அவர் வேலை

முடித்து இரவு 10 மணிக்குமேல் வருவார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் திருப்பனந்தாளிலிருந்து சேங்கனூருக்கு வந்து சமாதானம் பேசி என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த மனு ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்தின்போது போடப்பட்ட சீதனப் பொருட்களின் பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் உள்ளது தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரருக்கு சொந்தமாக வயல் இல்லை என்றால் சரிதான். தற்போது எதிர்மனுதாரர் குடியிருக்கும் வீடு காலனி வீடு என்றால் சரிதான். மனுவில் கூறப்பட்டுள்ளதுபோல எதிர்மனுதாரர் எந்த கொடுமையும் செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 2 தங்கைகள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

2. அவர் தங்கைகளுக்கு சீர் செய்யக்கூடாது என நான் தடுத்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தகப்பனார் உடல்நிலை சரியில்லாதவர் என்றால் சரிதான். சமாதானம் பேசி அழைத்து வந்த பிறகு நான் என் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்பதால்தான் நான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. திருமண வரவேற்பு சேங்கனூர் கோவிலில் வைக்கப்பட்டது. திருமண வரவேற்பிற்கான செலவுகளை எனது தந்தை செய்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கான செலவை எதிர்மனுதாரர் செய்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ பிடிக்காமல் நான்தான் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றாலும் அதனால் எனக்கு ஜீவனாம்சம் கிடைக்கக்கூடியதில்லை என்றாலும் சரியல்ல.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2025.01.10 17:50:03 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**